மாலை முரசு

பக்கங்கள் 15 + 4

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 07 திங்கட்கிழமை 23.09.2024 | அதிர்வு 53


## அநுரவுடன் நெருக்கமாக பணியாற்ற நான் ஆவல்

**இந்தியப் பிரதமர் தெரிவிப்பு**



இலங்கையின் நிறைவேற்று அதி காரமுடைய 9ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்

04


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# அரியணை ஏறிய அநுர



**பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம்**





இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பிரதம நீதியரசர் ஜயந்த

02

# நாடாளுமன்றம் எந்நேரத்திலும் கலைக்கப்படும்!



புதிய ஜனாதிபதியாக இன்று காலை சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க இன்றிரவு அல்லது நாளை - எந்நேரத்திலும் - நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குத் தயாராகிவிட்டார் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

04



**ரணிலின் அர்ப்பணிப்பை மதிக்கின்றேன்**

# அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவேன்

**புதிய ஜனாதிபதி அநுர உறுதி**

அனைத்து நாடுகளுடனும் அனைவருடனும் ஒன்றிணைந்து பொதுக் கொள்கையுடன் செயற்படுவேன் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

04





# அரியணை ஏறிய அநுர

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசூரிய முன்னிலையில் அநுரகுமார திஸாநாயக்க புதிய ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வு இன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

















# அநுரவுக்கு சீன ஜனாதிபதி வாழ்த்து!

இலங்கையின் புதிய ஜனாதிபதி யாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுர குமார திஸாநாயக்கவுக்குச் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தனது வாழ்த் துக்களைத் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"சீன அரசின் சார்பிலும் மக்களின் சார்பிலும் தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள். இரண்டு நாடுக ளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி 67 வருடங்களாகின்ற நிலையில் இரண்டு நாடுகளும் பரஸ்பரம் ஒருவருக் கொருவர் புரிந்துணர்வையும், ஆதர வையும் வழங்கி வருகின்றன.

நான் இலங்கை - சீன உறவுகளுக் குப் பெரும் முக்கியத்துவத்தை வழங் குகின்றேன். உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும்புதிய பட்டுப்பாதை திட்டத்தில் வெற்றிகரமான விடயங்க ளைச் சாதிப்பதற்கும் நான் ஆர்வமாக உள்ளேன்." - என்றுள்ளது.



# புதிய ஜனாதிபதியின் செயலாளராக நந்திக

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் செயலாளராக கலாநிதி நந்திக சனத் குமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# அநுரவின் நாடாளுமன்ற இடத்துக்கு லக்ஷ்மன் நிபுணராச்சி

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளால், வெற்றிடமாகியுள்ள அவரின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு லக்ஷ்மன் நிபுணராச்சி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட வேட்பாளர் பட்டியியல் அநுரகுமார திஸாநாயக்க மாத்திரமே தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு அடுத்தபடியாக அதிக விருப்பு வாக்குளை லக்ஷ்மன் நிபுணராச்சி பெற்றிருந்தார். அதன் பிரகாரம் அநுரகுமார திஸாநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனத்துக்கு லக்ஷ்மன் நிபுணராச்சி நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நாடாளுமன்றம்...

இது தொடர்பில் சட்டமா அதிபரிடமும் பிற சட்டத்துறை வட்டாரங்களிடமும் இன்று பகல் அவர் சட்ட ஆலோசனை பெற்றார் என்றும் நம்பகமாக அறிய வந்தது.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதாயின் பொதுத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், அதற்காக நாடாளுமன்றத்தை ஒரு தடவை கூட்ட வேண்டும் என்றும் சில தரப்புகள் தெரிவித்தனவாயினும், அது சட்டப்படி தேவையற்ற விடயம் என இப்போது ஜனாதிபதிக்கு உரிய தரப்புகள் சட்ட ஆலோசனை வழங்கியிருக்கின்றன எனத் தெரிகின்றது.

அரசமைப்பின் 150 ஆவது பிரிவின் கீழ் இத்தகைய சட்ட ஒதுக்கீட்டை நேரடியாக வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்பது அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கட்டத்தில் தற்போதைய நாடாளுமன்றத்தை அவர் கூட்டுவது, நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாத நிலையில் அவர் நிறுவக்கூடிய அரசைத் தோற்கடிக்கச் செய்யும் வாய்ப்பைத் தரும் என்பதால் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கூட்டாமலேயே முற்கூட்டியே அதைக் கலைத்து விடும் ஆலோசனை ஜனாதிபதிக்கு சட்ட வட்டாரங்களினால் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமையால் நாடாளுமன்றத்தில் அவரது இடத்துக்கு புதிதாக நியமிக்கப்படும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரின் பெயர் வர்த்தமானியில் இன்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அந்த அறிவிப்பு வந்ததும் வெளியில் ஒரு சமாதான நீதிவான் முன்னிலையில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்ததும் நாடாளுமன்றக் கலைப்பை ஜனாதிபதி முன்னெடுப்பார் எனத் தெரிகின்றது.

அது பெரும்பாலும் இன்றிரவு அல்லது நாளை இடம்பெறும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன.

### அநுரவுடன்...

டுள்ளமைக்காக அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிவாழ்த்துக்களைத்தெரிவித்துள்ளார்.

"இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றமைக்காக உங்களுக்கு எனது நல்வாழ்த்துகள். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளில் இலங்கை விசேட இடத்தைக் கொண்டுள்ளது.

நமது மக்களினதும் இப்பிராந்தியம் முழுவதினதும் நலன்களுக்காக நம்மிடையேயான பன்முக ஒத்துழைப்பை மேலும் வலுவாக்குவதற்காக உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்." – என்றும் இந்தியப் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### அனைவருடனும்...

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக அநுரகுமார திஸா நாயக்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் இன்று காலை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "தேர்தலை நடத்துவதும் அரச தலைவரைத் தெரிவு செய்வதும் மாத்திரம் ஜனநாயகமல்ல. எனது ஆட்சியில் ஜனநாயகத்தை முறையாகப் பாதுகாப்பேன்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்ப்பணிப்பையும், அவரது அரசியல் வகிபாகத்தையும் மதிக்கின்றேன்.

சவால்மிக்க பொருளாதார சூழலில் ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ளேன். அனைவருடனும் ஒன்றிணைந்து பயணிப்போம்.

நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது. அனைத்து நாடுகளுடனும் அனைவருடனும் ஒன்றிணைந்து பொதுக் கொள்கையுடன் செயற்படுவேன்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முறைமை மாற்றம் எப்போது?

புதிய ஜனாதிபதி - அரசுத் தலைவர் - பதவியேற்றுவிட்டார்.

நாட்டில் முறைமை மாற்றத்தை - சிஸ்டம் சேஞ்சை - வலியுறுத்தி நின்ற 'அறகலய' போராட்டத்தின் எழுச்சிதான் பெரும் எதிர்பார்ப்புடன் அவரை இந்தப் பதவி நிலை வரை நெட்டித்தள்ளி உயர்த்தி விட்டிருக்கின்றது என்பது கண் கூடு.

அத்தகைய அரசியல் மாற்றத்தை மக்களுக்குத் தாம் தருவார் என்ற அவரது வாக்குறுதிதான் வழமைக்கு மாறாக ஓர் இடதுசாரி தலைவரான அநுரகுமார திஸநாயக்கவை இன்று நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு உயர்த்தி விட்டிருக்கிறது. அந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்வது அவரது பிரதான கடமையும் பொறுப்புமாகும்.

அதை எப்படிச் செய்யப் போகின்றார் என்பதுதான் கேள்வி. மக்கள் எதிர்பார்க்கும் முறைமை மாற்றத்தை நிறைவு செய்வது என்பது எதிரணியில் இருந்து கொண்டு ஆட்சித் தரப்பை விமர்சிப்பது போன்ற இலகுவான காரியம் அல்ல. அத்தகைய விமர்சனப் போக்குத்தான் இன்று அநுரகுமார திஸநாயக்கவை இந்த வலிமைமிக்க அதிகாரப் பதவி நிலை வரை உயர்த்தியது என்றாலும், அந்த வாய்ப்பேச்சை இனிச் செயலில் செய்து காட்டுவது என்பது அவருக்கு அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை என்பது வெளிப்படையானது.

அந்த முறைமை மாற்றத்தை செய்வதற்கு புதிய ஜனாதிபதிக்கு ஆதரவாக வலிமையான அரசாங்கம் ஒன்று இருக்க வேண்டும். முறைமை மாற்ற திட்டங்களுக்கு இணைந்து, ஒத்துழைத்துச் செயல்படக்கூடிய நாடாளுமன்றம் அவருக்குக் கட்டாயமாக தேவைப்படும்.

அதற்காக இருக்கும் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்கு அவர் அழைப்பு விடுப்பார் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான்.

ஆயினும், ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கணிசமான வெற்றியை புதிய ஜனாதிபதி பெற்றுக் கொண்டாலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் அத்தகைய கணிசமான ஸ்திரத் தன்மையைப் பெறக்கூடிய நாடாளுமன்ற ஆதரவை அவருக்கும் அவரது கட்சியினருக்கும் பொதுமக்கள் வாரி வழங்குவார்களா என்பது கேள்விக்குறியே. அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றமையை அடுத்து உயிரோடு இருக்கும் முன்னாள் ஜனாதிபதிகளின் பட்டியல் ஐந்தாக உயர்ந்து விட்டது. ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை முன்னாள் ஜனாதிபதிகள் என்ற முறையில் நாடு சிறப்புரிமைக் கவனிப்புக்களுடன் பேணிப் போஷிப்பது தற்போதைய முறைமையில் அடங்கும். வதிவிடம், பாதுகாப்பு, அவர்களது செயற்பாடுகளுக்கு தனியான செயலணி என்று பெரும் தொகையை நாடு கொட்டிச் செலவிட வேண்டும். செலவிடுகின்றது. முன்னைய ஜனாதிபதியின் துணைவியார் என்ற முறையில் ஹேமா பிரேமதாஸ அம்மையாருக்கும் இதுபோல கவனிப்புகளை வழங்குவது நாட்டின் பொறுப்புகளில் ஒன்றாக உள்ளது.

அதுபோல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தப் பதவியில் அவர்கள் 5 வருடங்கள் பூர்த்தி செய்திருந்தால் அவர்களுக்கு வாழும் காலம் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

இது மாதிரியான பல சிறப்புரிமைகள், விசேட வசதிகள் போன்றுவற்றைத் தான் ஜனாதிபதியாக வந்ததும் நிறுத்துவார் என்று முன்னர் முழங்கி வந்தவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

அவரது உத்தேச முறைமை மாற்றத்தில் இவையெல்லாம் கூட அடங்கும்.

அந்த முறைமை மாற்றங்களை எப்படி, எப்போது, எந்த வழிமுறையில் அவர் நிறைவேற்றப் போகின்றார்? இன்று பதவியை ஏற்றிருக்கும் அவரிடமிருந்து இந்த விடயத்துக்கான பதிலை நாடு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. இது வரைகாலமும் வாயால் முழங்கியவற்றை அவர் இப்போது காரியமாகச் செய்து காட்ட வேண்டும்.

# புதிய ஜனாதிபதி அநுரா குமாரவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாழ்த்து

இன்று ஒன்பதாவது ஜனாதிபதியாக பதவி ஏற்கும் அநுரா குமார திசாநாயக்கவுக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் எம். நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல், இலங்கையில் சரித்திரத்தில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஜனநாயக செயன் முறையாகும்.

இந்த தருணத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை ஆதரித்து நாங்கள் ஆதரவு வழங்கிய சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்த முஸ்லிம் மக்கள் உட்பட அனைத்து வாக்காளர்களுக்கும் எங்களுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்ளவும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இத் தேர்தலை நேர்மையாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்த தேர்தல் ஆணைக்குழு, பொலிஸார் மற்றைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத் தேர்தல் ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்துகும், புதிய அரசியல் சிந்தனைக்கும், அது பற்றிய அணுகுமுறைக்குமான, மக்கள் எழுச்சியை உருவாக்கியுள்ளது. இது இலங்கைப் பிரஜைகளான நம் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்ற ஒருமித்த செய்தியாகும்.

சிங்கள மக்களின் ஆதரவை , அத்தகைய கொள்கைத்தளத்தின் மீது, அனுநுரகுமார திசாநாயக்க பெற்றிருப்பது அந்த புதிய அரசியல் கலாச்சாரத்தின் மூலக் கல் எனலாம்.

எந்த விதமான சிங்கள பௌத்த தேசிய உணர்வுகள், அல்லது வேறு எந்த மேலாண்மை வாதங்களும் முன்வைக்கப்படாமல் அடையப்பட்ட அநுர குமார திசாநாயக்கவின் வெற்றி கூர்ந்து கவனிக்கத்தக்கது.

மேலும் ஊழலற்ற அரசியலை, இன மத மெழி வேறுபாடுகளுக்கு அப்பால், ஒற்றுமைப்பட்ட தேசம் என்ற அடிப்படை யில் இலங்கை மக்கள் விரும்பி நிற்பதையும் உணரக் கூடியதாக உள்ளது.

இந்தப் பின்னணியில் புதிய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க மக்களின் நலனுக்காகக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இந்த நாட்டின் ஜனாதிபதியாக தன்னுடைய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதற்கான சகல ஒத்துழைப்பை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு எப்போதும் தயாராக உள்ளது.- என்றுள்ளது.








# வெற்றிக்களிப்பில் சாய்ந்தமருது இளைஞர்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாகத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்ட உத்தியோக அறிவிப்பைத் தொடர்ந்து சாய்ந்தமருது இளைஞர்கள் ஐஸ்கிறீம் பகிர்ந்து கேக் வெட்டி தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# அறுகம்பேயில் காட்டு யானைகள்; உல்லாசப் பிரயாணிகள் அச்சத்தில்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் பிரதேசவாசிகளும் வெளிநாட்டு உல்லாச பிராணிகளும் அச்சத்தில் வாழும் நிலைமை தோன்றியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் மாலையிலும் இரவு வேளையிலும் மக்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த காட்டு யானைகள் தற் போது வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி கள் பெருமளவில் சஞ்சரிக்கும் பொத்துவில் உல்லை மற்றும் அறுகம்பே பிரதேசத்தில் பகல் வேளையில் சர்வசாதாரணமாக நடமாட ஆரம்பித்துள்ளன.

கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் உட்புகும் காட்டு யானைகள் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் பயன் தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பலத்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன.

அண்மைக்காலமாக காட்டு யானையின் தாக்கத்தால் இப்பிரதேசங்களில் பல உயிர்களும் காவு கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மீராவோடை அல் ஹிதாயா மாணவனுக்கு இந்தியாவின் "சர்வதேச கலாம் தங்க விருது"

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலய மாணவன் அன்வர் அப்னான் இந்தியாவின் "சர்வதேச கலாம் தங்க விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்தியாவின் தமிழகத்தின் சென்னை மாநகரில் நேற்று (22) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற "சர்வதேச கலாம் உலக சாதனை விருது" விழாவில்தனதுகண்டுபிடிப்புக்களுக்காக கௌரவ விருதைப் பெற்றுக்கொண்டார்.

அன்வர் அப்னான் தனது அபாரத் திறமையால் பல்வேறு கண்டுபிடிப் புக்களை மேற்கொண்டுள்ளார். இவ் விருது அவரது கண்டுபிடிப்புக்களுக்கான சர்வதேச அங்கீகாரமாகும்.

பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு இளம் வயதில் பல கண்டுபிடிப்புக்களை மேற் கொண்டு வருகின்றார்.

பொருளாதார ரீதியாக உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் மேலும் பல கண்டு பிடிப்புக்களை இவர் மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய ஜனாதிபதி அநுர குமாரவுக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி வாழ்த்து!

(பழுவூரான்)

உங்களின் வெற்றி இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான பதிவாகும் என ஈரோஸ் ஜனநாயக முன்னணிப் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவ்வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தேர்தல் காலத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு பக்கம் நின்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தாலும், அதிகமான மக்களின் விருப்பத்தைப் பெற்று நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள்.

இந்த நிலையில் நீங்களே வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் இந்த நாட்டுக்கும் ஜனாதிபதி என்பது இறைவன் அளித்த கொடையாகும்.

இவ்வாறான காலத்தில் லஞ்சம் ஊழலற்ற நிலையில் சகலருக்கும் சமத்துவமான அரச நிர்வாக முறைமை மலரும் என நம்புகின்றோம்.



அதே நேரம் தமிழ் பேசும் சமூகங்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்துவீர்கள் என்று எதிர்ப்பார்க்கின்றோம்.- என்றுள்ளது.

# கடற்றொழிலுக்கு சென்றவர் படகுக்குள் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்கு சென்ற கடற்றொழிலாளர் ஒருவர் படகினுள் இருந்து சடலமாக இன்று மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபரின் சடலமானது இன்று (23) காலை பொன்னாலையில் கரை ஒதுங்கியிருந்த படகிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.இந்த நிலையில், அராலி மத்தி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 54 வயதுடைய பேரானந்த சிதம்பரம் நாகராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயரிழந்த நபர் நேற்று (22) மாலை 5.30 மணியளவில் அராலியில் இருந்து தனியாக கடற்றொழிலுக்கு சென்றுள்ளார்.

இவ்வாறு சென்றவர் இன்று காலை வரை திரும்பி வராத நிலையில் தேடுதலில் ஈடுபட்ட ஊரவர்கள், அவரது சடலத்தை பொன்னாலை கடலில் படகுடன் மீட்டுள்ளனர்.

சடலத்தின் வாயில் காயம் ஒன்று காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நேற்றுக் கொக்கட்டிசோலையில் தேரோட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த தேரோட்ட வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

ஆலய பிரதம குருக்கள் சிவசிறி மு.கு.சச்சிதானந்த குருக்கள் முன்னிலையில் ஆலய தலைவர் இ. மேகராசா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு ஒன்று கூடினர்.

ஆலயத்தில் பூஜைகள் இடம் பெற்று இரண்டு அலங்கார சித்திரத்தேரில் தெய்வங்கள் ஆரோகணிக்க அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க தேர்கள் அசைந்தன.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடிக்க தேரோட்டம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.





# தண்ணீர் தொட்டியில் வீழ்ந்த 11 மாதக் குழந்தை உயிரிழப்பு!



முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் தண்ணீர் தொட்டியில் தவறி வீழ்ந்த குழந்தை உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (22) காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில 11 மாத குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை தனது தாயுடன் குளியலறையில் இருந்த போது தண்ணீர் நிறைந்த தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கியுள்ளது.

இந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு - கிழக்கு மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்

## புதிய ஜனாதிபதிக்கான வாழ்த்துச் செய்தியில் அங்கஜன் எம்.பி.

(த.சுபேசன்)

தங்களின் எதிர்கால செயற்பாடுகள் ஊடாக வடக்கு - கிழக்கு மக்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் அங்கஜன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய ஜனாதிபதிக்கான வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் ஆணையோடு தெரிவாகியுள்ள, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கு ஜனநாயக மாண்புடன் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைதியும் நீதியுமான தேர்தல் ஒன்றில், ஆரோக்கியமான போட்டியை முன்னிறுத்தி இலங்கை மக்களின் ஜனநாயக தீர்ப்புக்கமைய உங்கள் வெற்றியை நீங்கள் உறுதி செய்துள்ளீர்கள்.

மாற்றம், நீதியான ஆட்சிமுறை, ஊழலற்ற அதிகார கட்டமைப்பு உள்ளிட்ட உங்களது எண்ணங்களின் மீது மக்கள் தமது திடமான நம்பிக்கையை வைத்துள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

புதிய அரசியல் பாதையை இலங்கை நாட்டுக்கு உங்கள் வெற்றியூடாக உருவாக்கியுள்ளீர்கள். இந்த வெற்றிக்காக உங்களோடு பங்காற்றிய கட்சியினர்,



ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

இந்த நாடு கடந்து வந்துள்ள அரசியல் கலாசாரத்தில், இந்நாட்டின் இனங்கள் மீதான பாகுபாடு தீர்க்கப்படாமல் அவை தேர்தல் வெற்றிகளுக்காகக் காலங்காலமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

எங்கள் மக்களின் உரிமைகள், பெறப்பட வேண்டிய நீதிகள், அதிகார பகிர்வுகள் உள்ளிட்ட கோரிக்கைகளை கட்சி அரசியல் தாண்டி நாட்டு மக்கள் அனைவருக்குமான ஜனாதிபதியாக நேர்மையுடன் கையாண்டு நல்லதோர் மாற்றத்தை எங்கள் மக்களுக்கு வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

ஜனாதிபதி தேர்தலின் பிரசார காலங்களில் நீங்கள் விடுத்த கோரிக்கையைத் தேர்தல் முடிவுகளில் வடக்கு - கிழக்கு மக்கள் நிராகரித்தனர் என்று எடுத்துக்கொள்ளாமல், உங்கள் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் அவையூடாக பெற்றுக்கொடுக்கப்படும் தீர்வுகள் ஊடாக எதிர்காலத்தில் மாற்றமொன்றை அவர்கள் மனங்களிலும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

நீண்டகால உரிமைசார் பிரச்சனைகளோடு, உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய அபிவிருத்தி, பொருளாதார தீர்வுகளுக்காகவும் வடக்கு மக்கள் காத்திருக்கிறார்கள். அவற்றையும் உங்கள் கவனத்துக்கு கொண்டுவருகிறேன்.

2022 இற்குப் பின்னர் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியை தென்னிலங்கை மக்கள் எதிர்கொண்டதைப் போன்று, நாட்டின் கடந்தகால வன்முறைகள், யுத்தங்களால் பொருளாதார, அபிவிருத்திசார் பின்னடைவுகளை பல ஆண்டு காலமாக வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

அவற்றையும் சமாந்தரமாக தீர்க்க வேண்டும் என நாம் நாட்டின் ஜனாதிபதிகளிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம்.

நாட்டினதும் மக்களதும் எதிர்கால நலனுக்காகவும் ஓர் சிறந்த அரசியல் கலாசார மாற்றத்துக்காகவும் தாங்கள் முன்வைத்துள்ள கொள்கைத்திட்டத்தினூடாக முன்னெடுக்கும் செயற்பாடுகள் சரியாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் எமது ஒத்துழைப்பும், மக்களின் ஆதரவும் தங்களுக்கு கிடைக்கும் என்ற செய்தியையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களது ஜனாதிபதி ஆட்சிப் பதவிக்காலத்துக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றுள்ளது.




# கிண்ணியாவில் கேக் வெட்டிக் கொண்டாட்டம்!

(எச். எம். ஹலால்தீன் )

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்துக் கிண்ணியாவில் கேக் வெட்டி கொண்டாடினர்.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் பதவி ஏற்பதை அடுத்து இன்று கிண்ணிய புஹாரியடி சந்தியில் பொது மக்கள், கட்சி ஆதரவாளர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.இதேவேளை, வெடி கொளுத்தியும் மகிழ்ச்சியை ஆதரவாளர்கள் வெளிப்ப டுத்தினர்.

இதுவரை காலமும் இல்லாதவாறு ஜனாதிபதியின் வெற்றிக் கொண்டாட்டம் கிண்ணியாவில் கொண்டாடப்பட்டது.





# சம்மாந்துறையில் வெற்றி கொண்டாட்டம்.

(தில்சாத் பர்வீஸ்)

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக வெற்றி பெற்று இன்று பதவியை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்காவின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை பிரதேச ஆதரவாளர்கள் இன்று திங்கட்கிழமை (23) காலை 09.30 மணி முதல் சம்மாந்துறை நகர்ப் பகுதியில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் உயர்பீட உறுப்பினர் முஹம்மட் புஹாரி தலைமையில் நடைபெற்றது.

பொது மக்கள் பலரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இனிப்புப் பண்டத்தைப் பெற்றுக் கொண்டனர்.





# மறவன்புலோ கடல் பகுதியில் ஒருவர் சடலமாக மீட்பு!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மறவன்புலோ கடல் பகுதியில் வெள்ளிக்கிழமை (20) மாலை நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனங்களப்பு பகுதியைச் சேர்ந்த 67வயதான இந்த நபர் கடலுக்குள் மீன் பிடிக்குச் சென்ற சமயம் தவறி நீருக்குள் விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த நபருடைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை மக்கள் அனைவரையும் சமநோக்கோடு பார்க்க வேண்டும்!

## சர்வதேச இந்து மத பீடம் புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை

9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்ட அநுரகுமார திசாநாயக்க இலங்கை வாழ் அனைத்து மக்களையும் சம நோக்கோடு அணுகி இந்த நாட்டில் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை வலுவூட்டி செயல்பட சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கிறது.

சர்வதேச இந்து மத பீடச் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு – கிழக்கு மக்கள் இந்த முறை கூடுதலான வாக்கு களைப் புதிய ஜனாதிபதிக்கு அளித்திருக்கிறார்கள்.

இந்த வெற்றியில் வடக்கு – கிழக்கு மக்களும் பங்கெடுத் தமை ஒரு பாராட்டத்தக்க விடயம். சகல மதங்களையும் சகல இனங்களையும் சுய கௌரவத்தோடு நடத்தி கலை கலாச்சாரங்களை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு அனைத்து விதத்திலும் புதிய ஜனாதிபதி பங்களிக்க வேண்டும்.



தத்தம் இனங்களின் அடையாளங்களை அவர்கள் வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.






# பாற்சோறு வழங்கி மக்கள் தோப்பூரில் கொண்டாட்டம்

( எச். எம். ஹலால்தீன் )

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதை அடுத்து தோப்பூரில் மக்கள் பாற்சோறு வழங்கிக் கொண்டாடினர்.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் பதவி ஏற்றதை அடுத்து இன்று தோப்பூர் பொதுமக்கள், கட்சி ஆதரவாளர்கள், தொண்டர்களால் பால் சோறு வழங்கி கொண்டாடப்பட்டது.

பொது மக்கள் மற்றும் வீதிகளில் பயணித்தவர்களுக்கும் ஆதரவாளர்கள் பாற்சோறு வழங்கி மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.





# குளவி கொட்டுக்கு இலக்காகிய 17 பெண்கள் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா)

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண்கள் குளவி கொட் டுக்கு இலக்காகிய நிலையில் மஸ் கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட புரவுன்சீக் பிரிவில் தேயிலை கொழுந்து பரித்து கொண்டு இருந்த வேளையில் கலைந்து வந்த குளவி கொட்டுக்கு இலக்கிய நிலையில் 17 பெண்கள் மஸ் கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக் காகிய பெண்களில் 14 பெண்கள் சிகிச் சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். மூன்று பெண்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.





# புதிய ஜனாதிபதி பதவியேற்புக்கு ஆசிவேண்டி கல்முனையில் பூசை

(வி.ரி.சகாதேவராஜா)

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்கும் நிலை யில் ஆசி வேண்டி கல்முனை தொகுதி தேசிய மக்கள் கட்சி செயற்பாட்டாளர் களின் ஏற்பாட்டில் விசேட பூசை வழி பாடு கல்முனை ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று (23) திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

புதிய ஜனாதிபதி அநுரகுமாரகுமார தலைமையில் மக்களுக்கான இன மத பேதமற்ற ஆட்சி சிறப்பாக இடம் பெற ஆசி வேண்டி விசேட பூஜை வழி பாடு இடம்பெற்றது.

இவ் வழிபாட்டில் தேசிய சமாதான அபிவிருத்தி மையத்தின் தலைவர் வி. ரி. சம்பந்தர் தலைமையில் தேசிய மக் கள் கட்சி செயற்பாட்டாளர்கள், மற்றும் ஆலயங்களின் நிர்வாகத்தினர், ஆதர வாளர்கள் பங்குபற்றினர்.

பூசை வழிபாடுகள் சிவஸ்ரீ ச. கு. ரேவதீசன் குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றன.

பூஜை நிறைவில் நாட்டுக்கு நல்லாசி வேண்டிப் பிரார்த்தனை இடம் பெற் றது.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# அதிக அபராதம் விதிப்பதைத் தடுத்திடவும் மீனவர்களை மீட்கவும் நடவடிக்கை தேவை

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜெய்சங்கருக்கு கடிதம்






இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள் மீது அதிக அளவில் அபராதம் விதிப்பதைத் தடுக்கவும், மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன் பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திடவும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரைச் சேர்ந்த 37 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடந்த 21 ஆம் திகதி சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் வசூலிப்பதைத் தடுக்கவும், மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் .

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டிய படி, தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடிக்கும் போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது.

கைது செய்யப்படும் மீனவர்களிடம், அவர்களது சக்திக்கு மீறிய அபராதங்களை இலங்கை நீதிமன்றங்கள் விதித்து வருகின்றன. அதோடு, மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகள் இதுபோன்று கைது செய்வதைத் தடுத்திட உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் .

எனவே, கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் விதிப்பதைத் தடுக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்."- என்று குறிப்பிட்டுள்ளார்.

# மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 பட்டத்தை வென்றார் ரியா சிங்கா










மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 பட்டத்தை வென்றுள்ளார் 18 வயதான ரியா சிங்கா. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 இறுதிப்போட்டி வெகு விமரிசையாக நடந்தது.

இந்த கண்கவர் நிகழ்ச்சியில் முன்னாள் மிஸ் யுனிவர்ஸ் இந்தியாவும், நடிகையுமான ஊர்வசி ரவுதெலா, நிகில் ஆனந்த், வியட்நாம் திரைப் பிரபலம் குயங் க்வின் உள்ளிட்டோர் நடுவர்களாகப் பங்கேற்றனர்.

51 போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்த பிரம்மாண்ட இறுதிப் போட்டியில் குஜராத்தைச் சேர்ந்த ரியா சிங்கா, 2024 ஆம் ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் இந்தியாவாக மகுடம் சூட்டப்பட்டார். இரண்டாம் இடத்தை பிரஞ்சல் பிரியா, 3 ஆவது இடத்தை சாவி வெர்ஜ் ஆகியோர் பிடித்தனர்.

மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 பட்டத்தை வென்றதை அடுத்து வரும் நவம்பர் மாதம் மெக்சிகோவில் நடக்கவிருக்கும் மிஸ் யுனிவர்ஸ் 2024 போட்டியில் இந்தியா சார்பில் ரியா சிங்க கலந்துகொள்கிறார்.

மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 பட்டம் வென்றது தொடர்பாக பேசிய சிங்கா,

"நான் மிஸ் யுனிவர்ஸ் இந்தியா 2024 பட்டத்தை வென்றிருக்கிறேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம். இந்த பட்டத்துக்கு என்னை தகுதிப்படுத்திக் கொள்ள நான் நிறைய உழைப்பைச் செலுத்தியுள்ளேன். இதற்கு முன் இந்தப் பட்டத்தை வென்றவர்களிடமிருந்து நான் எனக்கான உந்துதலைப் பெற்றேன்." என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் நடுவர்களில் ஒருவரான ஊர்வசி ரவுதெலா கூறுகையில்,

"மிஸ் யுனிவர்ஸ் 2024 பட்டத்தை இந்தமுறை இந்தியா வெல்லும் என நான் நம்புகிறேன். இங்கே பங்கேற்ற அழகிகள் அனைவரும் திறமையானவர்கள். இந்தத் திறமை இந்தியாவுக்கு வெற்றி பெற்றுத் தரும்." - என்றார்.




# இஸ்ரேல் - ஹிஸ்புல்லா மோதல் அதிகரிப்பு; மக்களை வெளியேறுமாறு அமெரிக்கா அறிவிப்பு

கடந்த ஜூலை மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹஸன் நசரல்லாவின் வலதுகரமாக செயல்பட் புவத் ஷுக்கர் கொல்லப்பட்டதை தொடர்ந்து லெபனான் நாட்டுக்கான பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா அறிவித்திருந்தது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் சிறப்பு அதிரடிப் படையான 'ரத்வான்' படையின் தளபதி இப்ராஹிம் அக்கீல் மற்றும் அஹமது வாபி ஆகியோர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்புக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது.

இந்த நிலையில்தான், தனது குடிமக்களை லெபனான் நாட்டிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது. விமானப் போக்குவரத்து சேவை இன்னும் அமுலில் உள்ள நிலையில் அதனை பயன்படுத்தி உடனடியாக லெபனானை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல், கடந்த 2006 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற இஸ்ரேல்-ஹிஸ்புல்லா போருக்குப் பிறகு பெய்ரூட்டில் நடத்தப்பட் மிக மோசமான தாக்குதலாக கருதப்படுகிறது.

இஸ்ரேல் நடத்திய இந்த வான் வழித் தாக்குதலில் 37 பேர் உயிரிழந்தனர் என லெபனான் சுகாதார துறை அமைச்சர் பிராஸ் அபைது தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலடியாக ஹிஸ்புல்லா அமைப்பினர் கடந்த சனிக்கிழமை இரவு இஸ்ரேலின் ஜெஸ்ரீ பள்ளத்தாக்கின் வடக்கு நகரங்கள் மீது10 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். இவற்றில் பெரும்பாலானவற்றை இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்துவிட்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் இந்த தாக்குதலில் 60 வயது முதியவர் காயமடைந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல் தீவிரமானதிலிருந்து இஸ்ரேலிய எல்லைக்குள் ஆழமாக ஊடுருவி ஹிஸ்புல்லாக்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுக் கொண்ட ஹிஸ்புல்லா ராமட் டேவிட் விமானப் படைத் தளத்தைகுறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அறிவித்துள்ளனர். இது, லெபனான் எல்லையிலிருந்து 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இஸ்ரேலிய விமானப் படைக்கு சொந்தமான மிக முக்கியமான விமான படை தளமாகும்.

இந்த தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, இஸ்ரேலிய ஜெட் விமானங்கள் லெபனான் முழுவதும் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகின்றன. சுமார் 300 ஹிஸ்புல்லா நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.



# பலஸ்தீன ஜனாதிபதியுடன் இந்திய பிரதமர் மோடி சந்திப்பு

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, நியூயோர்க்கில் பலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸை சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போது, பிராந்தியத்தில் விரைவாக அமைதி திரும்ப இந்தியாவின் ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது அவை அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அங்கு நேபாள பிரதமர் கே.பி ஒளி, குவைத் இளவரசர் ஷேக் சபா கலீத் அல்-ஹமத் அல்-சபா, பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் உள்ளிட்டோரைச் சந்தித்தார். மஹ்மூத் அப்பாஸ் உடனான சந்திப்பின் போது, பாலஸ்தீன மக்களுக்கான இந்தியாவின் உறுதியான ஆதரவை வெளிப்படுத்தினார். இது தொடர்பாக மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"நியூயோர்க்கில் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸை சந்தித்தேன். பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கு இந்தியாவின் ஆதரவை மீண்டும் வலியுறுத்தினேன். பலஸ்தீன மக்களுடனான நீண்டகால நட்பை மேலும் வலுப்படுத்துவது பற்றிய கருத்துகளை பரிமாறிக் கொண்டேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்கங்கள் 04

கனடா முரசு

திங்கட்கிழமை 23/09/2024

## ஒஷாவா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கனடாவின் ஒஷாவா பகுதியில் சனிக்கிழமை இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயது டைய இளைஞர் ஒருவர் கொல்லப்பட் டுள்ளார்.ஒஷாவாவின் 02




# தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை புதிய ஜனாதிபதி அநுரகுமார உறுதி செய்வார்!

## நம்புகிறோம் என்கிறது கனேடிய தமிழர் பேரவை

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தமிழர்களின் நீதிக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பார் என்றும், நாட்டின் எதிர்காலத்தை வடிவ மைப்பதில் தமிழ்ச் சமூகம் முழுமையாகப் பங்கெடுக்க முடியும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.**

**- இவ்வாறு கனேடிய தமிழர் பேரவை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

**இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸா நாயக்கவுக்குக் கனேடிய தமிழர் பேரவை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.**

இந்த வாழ்த்துச் செய்தியில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அவரது வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தைப் பிரதிபலிக்கிறது. மாற்றம் மற்றும் சீர்திருத்தத்துக்கான மக்களின் தெளிவான விருப்பத்தைக் குறிக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்தி நடத்திய மாற்றத்துக்கான பரப்புரை முயற்சி மில்லியன் கணக்கான இலங்கை மக்களுடன் ஒன்றிணைந்து இயங்கியமையை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றோம்.

புதிய ஜனாதிபதி தனது பதவிப் பொறுப்புக்களை ஏற்கும் நிலையில், இலங்கை வாழ் தமிழ்த் தேசிய இனத்தின் கவலைகள் மற்றும் நீண்டகால அரசியல் அபிலாசைகளை நிவர்த்தி செய்வதற்கு வரவிருக்கும் அவரது நிர்வாகம் முன்னுரிமையளிக்கும் எனக் கனேடியத் தமிழர் பேரவை நம்புகிறது.

பல தசாப்தங்களாக, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சமத்துவம், நீதி மற்றும் பிரதிநிதித்துவம் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தமிழர்களின் நீதிக்கான உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பார் என்றும், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்ச் சமூகம் முழுமையாகப் பங்கெடுக்க முடியும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணை மேலும், அமையவுள்ள ஆட்சி கடந்த காலத் தவறுகளைத் தவிர்த்து நேர்மை, வெளிப்படைத்தன்மை, அனைவரையும் உள்வாங்குதல் போன்றவற்றால் வழிநடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமைத்துவம், இலங்கையை ஊழலற்ற, பாகுபாடற்ற, நேர்மைத்திறனுடன் கூடிய அனைத்து சமூகங்களும் செழிப்பாக வளரக்கூடிய சிறப்பான எதிர்காலத்தை நோக்கி நகர்த்துமெனக் கனேடியத் தமிழர் பேரவை நம்பிக்கை கொண்டுள்ளது.

புதிய ஜனாதிபதிக்கு வழங்கப் பட்டுள்ள மக்கள் ஆணையைப் பயன்படுத்தி, தமிழ் மக்கள் உட்பட அனைத்து இலங்கையர்களதும் உரிமைகள், நலன்கள் போன்றவற்றை உறுதி செய்து, நேர்மை, உள்வாங்குதல் மற்றும் நீதியுடனான வழிநடத்தலை அவர் தனது பதவிக்காலத்தில் மேற்கொள்ள நாங்கள் அவரை ஊக்குவிக்கிறோம்.- என்றுள்ளது.




# ஸ்காபரோவில் இளைஞர் சுட்டுக்கொலை; சகோதரர் கொலைக் குற்றச்சாட்டில் கைது

வார இறுதியில் ஸ்காபரோவில் சுட்டுக்கொல்லப்பட்ட 27 வயது இளைஞனின் சகோதரர் கைது செய்யப்பட்டார். மேற்படி இளைஞனின் மரணம் தொடர்பாக சகோதரர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சனிக்கிழமை இரவு கிங்ஸ்டன் மற்றும் மார்க்கம் சாலைகளுக்கு அருகில் உள்ள குடியிருப்பு வளாகத்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் துப்பாக்கிச்சூடு நடந்தது.

இரவு 11 மணிக்குப் பின்னரே தாங்கள் அந்தப் பகுதிக்கு அழைக்கப்பட்டனர் என றொறன்ரோ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில், துப்பாக்கிச் சூட்டுக் காயத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரை அதிகாரிகள் கண்டனர்.

பாதிக்கப்பட்ட நபர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் சிறிது நேரத்தில் மருத்துவமனையில் அவர் இறந்தார் என அறிவிக்கப்பட்டது.

அவர் றொறன்ரோவைச் சேர்ந்த 27 வயதான கிறிஸ்டோபர் மால்கம் என பொலிஸாரால் ஞாயிற்றுக் கிழமை அடையாளம் காணப்பட்டது.

இந்த மரணம் தொடர்பாக இரண்டாம் நிலை கொலைக்காக அவரது சகோதரரான றொறன்ரோவைச் சேர்ந்த கார்ல்டன் மால்கம் ( வயது25) தேடப்பட்டார். ஞாயிற்றுக்கிழமை மதியம் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மால்கம் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளார்.






## ஒஷாவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


401 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

எதனால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது குறித்து இன்னமும் கண்டறி யப்படவில்லை. இந்த விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விவரங்கள் எவையும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.





# முகம் சுழிக்க வைக்கும் இந்தச் செயல் உண்மையில் கனடாவில் நடக்கின்றதா?

கனடாவில் உள்ள உலகின் நீண்ட பெரிய நன்னீர் ஏரிக்கரையான வசா காபீச் இல் மலம்கழிப்பது போன்ற முகம் சுளிக்க வைக்கும் செயல்களை இந்தியர்கள் செய்கின்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

ஒரு கூட்டத்தினர் ஏரிக்கரை நிலத்தில் அமைக்கப்பட்ட கூடாரத்தை கழிவறையாப் பயன்படுத்துவது பற்றிய காணொலிக் காட்சி இணையத்தில் வைரலாகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பிரபல யூ டியூபர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் -

நன்னீர் ஏரிக்கரையில் மக்கள் போய் நீச்சல் அடிக்கின்றனர். கோடைக் காலங்களில் மகிழ்ச்சியாக இருப்பதுபோன்ற விடயங்கள் நடைபெறுகின்றன்.

இந்த ஏரிக்கரையில் புதிதாக வரும் இந்தியர்கள் மலம் கழிக்கின்றனர் என்ற விடயத்தைப் பெண்ணொருவர் முதன் முதலில் வெளியில் கொண்டு வந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் எவ்வித அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. மேலும் இவ்வாறான சம்பவம் தொடர்பில் பல்வேறு ஊடகங்களில் தகவல் வெளிவந்த வண்ணம் உள்ளன. - என்று அந்தத் தகவலில் மேலும் கூறப்பட்டது.

# காணாமல் போன ஆறு வயது சிறுவன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்பு

## வடகிழக்கு மானிடோபாவில் சம்பவம்

வடகிழக்கு மானிடோபா பெர்ஸ்ட் நேஷனில் கடந்த புதன்கிழமை முதல் காணாமல் போன ஆறு வயது சிறுவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டான் என்று என்று றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் கூறுகிறது.

ஷமட்டாவா ஃபர்ஸ்ட் நேஷனில் தேடியவர்கள், இரவு 7:45 மணியளவில் ஜான்சன் ரெட்ஹெட் இறந்து கிடப்பதைக் கண்டனர் என ஞாயிற்றுக்கிழமை இரவு, மானிடோபா றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் ஒரு செய்தி வெளியீட்டில் தெரிவித்துள்ளது.


சிறுவன் கடைசியாகக் காணப்பட்ட பள்ளியிலிருந்து மூன்றரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள சதுப்பு நிலப் பகுதியில் சடலமாலக் கண்டெடுக்கப்பட்டான்.

புதன்கிழமை காலை வடகிழக்கு மனிடோபா ஃபர்ஸ்ட் நேஷனில் உள்ள பள்ளியில் காலை உணவு நிகழ்ச்சியில் சிறுவன் கலந்துகொண்டான். ஆனால் அதன் பிறகு வகுப்பில் வரவில்லை என்று றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் கூறியது.

அவரது மறைவு சமூக உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் மற்றும் காவல்துறையினரால் பெரிய அளவிலான தேடலைத் தூண்டியது.

“அவரது குடும்பத்திற்கும், ஷமத்தாவா முதல் தேசத்தின் சமூகத்திற்கும் மற்றும் அவரது இழப்பால் துக்கப்படும் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் அவர்களின் வெளியீட்டில் தெரிவித்துள்ளது






# கனடாவுக்குக் கல்வி கற்பதற்குச் சென்ற இந்திய இளம் யுவதிக்கு நேர்ந்த துயரம்

கல்வி கற்பதற்காக, தங்கள் குடும்பத்தின் விவசாய நிலத்தை விற்று கனடா சென்ற ஒரு இளம்பெண் தொலைபேசியில் தன் பெற்றோருடன் பேசிக்கொண்டிருக்கும்போதே நிலை குலைந்து சரிந்தார்.

நவ்தீப் கௌர் (வயது 22) என்னும் இளம்பெண், கனடாவில் கல்வி கற்பதற்காகச் சென்றிருந்தார்.

இந்த மாதத் துவக்கத்தில், இந்தியாவிலிருக்கும் தன் தந்தையான குர்பிரீத் சிங்கிடம் மொபைலில் பேசிக்கொண்டிருந்தபோதே, திடீரென நிலைகுலைந்து சரிந்துள்ளார் நவ்தீப்.

உடனடியாக பிராம்ப்டனிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நவ்தீப்பைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவரது மூளையில் கட்டி ஒன்று உள்ளதாகவும், அதை அகற்ற அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

அதன்படி அறுவை சிகிச்சை செய்யப்பட, அபாய கட்டத்தைத் தாண்டிய நிலையிலும், வென்டிலேட்டரில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது நவ்தீப்புக்கு.

ஆனால், அவரது உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக, அவரது உடல் நிலை நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டே செல்ல, இம்மாதம் 19ஆம் திகதி நவ்தீப்புக்கு அளிக்கப்பட்டுவந்த செயற்கை சுவாசம் நிறுத்தப்பட்டது.

விவசாய நிலத்தை விற்று இந்தியப் பணத்தில் 35 லட்ச ரூபா செலவு செய்து மகளை கனடாவுக்கு கல்வி கற்க அனுப்பிய நிலையில், மகள் உயிரிழந்த செய்தி கேட்டு நவ்தீப் குடும்பம் கவலையில் ஆழ்ந்துள்ளது.

அவரது உடலை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்காக அரசின் உதவியை நாடியுள்ளனர் நவ்தீப்பின் பெற்றோர்.

# காணாமல் போன ஆறுச் வயது சிறுமி 3 நாள்களின் பின் பத்திரமாக மீட்பு!

## வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவில் சம்பவம்

வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடந்த வியாழக்கிழமை முதல் காணாமல் போன ஆறு வயது சிறுமி பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார்.

பர்ன்ஸ் ஏரிக்கு தெற்கே 25 கிலோமீட்டர் தொலைவிலும், பிரின்ஸ் ஜோர்ஜுக்கு மேற்கே 200 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ள சவுத்பேங்க் சமூகத்தில் கடந்த19 ஆம் திகதி மாலை 6 மணி முதக் குழந்தையை காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி முதலில் பேஸ்புக்கில் நேரடி வீடியோ ஊட்டத்தில் வெளியிடப்பட்டது.

குழந்தை தனது தாயுடன் மீண்டும் இணைக்கப்பட்டுஅம்புலன்ஸில் அழைத்துச் செல்லப்பட்டபோது டஜன் கணக்கான தன்னார்வலர்கள் மற்றும் தேடுபவர்கள் மகிழ்ச்சியடைவதை அடுத்தடுத்த வீடியோக்கள் காட்டுகின்ன்றன.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குப் பிறகு சிறுமி கண்டுபிடிக்கப்பட்டார் என றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் ஓர்அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முன்னதாக அவரது வீடு மற்றும் ஸ்கின் டை ஃபர்ஸ்ட் நேஷன் இசைக்குழு அலுவலகம் ஆகியவற்றுக்கு அருகிலுள்ள ஒரு காட்டில் , அதிகாரிகள் அக்குழந்தையைத் தேடினர்.

“நாங்கள் அனைவரும் எதிர்பார்த்த முடிவு இதுதான், பல நாள்களாக அவள் காணாமல் போயிருந்தாள். ஆனால் தேடிய அனைவரும் அவளைப் பத்திரமாக வீட்டிற்கு அழைத்து வருவதற்கு அர்ப்பணிப்புடன் இருந்தனர்” என்று பர்ன்ஸ் லேக் றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸ் அலுவலரான சார்ஜன்ட் ஜோசுவா ஸ்மித் கூறினார்.



“இந்த முடிவை அடைய இரவும் பகலும் உழைத்த எங்களின் அனைத்து சகோதர ஏஜென்சிகள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதரவிற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.” - என்றார் அவர்.